செ.வெ.எண் : 17/ ஏப்ரல் நாள் : 10.04.2019

## இராமநாதபுரம் மாவட்டம்

## இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட 792 வாக்குச்சாவடி மையங்களில் Web Camera மூலம் கண்காணிக்கப்படவுள்ளது

## மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (10.04.2019) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தேர்தல் வாக்குப்பதிவு நாளன்று வாக்குச்சாவடி மையங்களில் Webcam Live Casting முறையில் கண்காணிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் நாடாளுமன்ற தொகுதிக்கான பொதுத்தேர்தல், பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தல் வாக்குப்பதிவிற்கு அனைத்து முன்னேற்பாடு பணிகளும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளில் 1,916 வாக்குச்சாவடி மையங்களும், பரமக்குடி சட்டமன்ற தொகுதி மட்டும் 302 வாக்குச்சாவடி மையங்களும் உள்ளன. தேர்தல் வாக்குப்பதிவின்போது பொதுமக்கள் எவ்வித அச்சமுமின்றி சுதந்திரமாக வாக்களித்திட ஏதுவாக தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும். அந்த வகையில் இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் 792 வாக்குச்சாவடி மையங்கள் தேர்வு செய்யப்பட்டு, Webcam Live Casting முறையில் இணைய வழியில் கண்காணிக்கப்படவுள்ளது.

இவற்றில் இராமநாதபுரம் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளில் பதற்றமான வாக்குச்சாவடி மையங்களாக கண்டறியப்பட்டுள்ள 140 வாக்குச்சாவடி மையங்களும் அடங்கும். இத்தகைய கண்காணிப்பின் மூலம் வாக்குச்சாவடி மையங்களில் நிகழும் நிகழ்வுகள் குறித்து இணைய வழியில் எளிதாக கண்காணித்திட முடியும். இருப்பினும் web casting முறை கண்காணிப்பு பணிகளின்போது இந்திய தேர்தல் ஆணையம் வரையறுத்துள்ள விதிமுறைகளை முறையே பின்பற்றுவது அவசியமாகும். ஒவ்வொரு வாக்குச்சாவடி மையத்தின் உட்கட்டமைப்பும் வெவ்வேறு விதமாக இருக்கும். அதன்படி Web Camera பொருத்தும்போது வாக்காளரின் வாக்களிப்பு உரிமை அவசியத்தினை பாதுகாத்திடும் விதமாக அமைத்திட வேண்டும். இதனை சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் web Cam இயக்குபவர்கள் உறுதி செய்திட வேண்டும். மேலும் இத்தகைய கண்காணிப்பு பணியில் ஈடுபடும் பொறுப்பாளர்கள் உரிய விண்ணப்பத்தினை சமர்ப்பித்து தபால் வாக்குச்சீட்டு மூலம் தவறாமல் வாக்குப்பதிவு செய்திட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், தேசிய தகவல் மையம் அலுவலர் (பொ) திரு.பழனிவேல்ராஜா, உதவி மகளிர் திட்ட அலுவலர் (Web Casting Nodal Officer) திரு.விக்னேஷ்வரன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**